# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Department of Education – Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

## குடியியற்கல்வி

| | | |
|---|---|---|
| பெயர் / சுட்டெண்:- …………………… | தரம் :- 9 | நேரம் :- 2 மணித்தியாலம் |

**கவனிக்க**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4). என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியானது அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

## பகுதி I

1. ''பன்சலையின் பிதா'' என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டவர்
   (1) தோமஸ் அல்வா எடிசன் (2) ஆபிரகாம் லிங்கன்
   (3) மர்சலின் ஜயகொடி (4) ரொபட்ஓவன்
2. இலங்கையின் பிரதான சட்ட அதிகாரியாகச் செயற்படுபவர்
   (1) பிரதம நீதியரசர் (2) சட்டமா அதிபர் (3) நீதி அமைச்சர் (4) சபாநாயகர்
3. 1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்கச் சட்டதின் மூலம் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அமைப்பு
   (1) அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களம்
   (2) சட்டமா அதிபர் திணைக்களம்
   (3) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
   (4) மனித உரிமைகள் ஆணைக்குழு
4. ''தந்தை நாட்டுக்காக'' என்னும் மகுட வாசகத்தைக் கொண்டுள்ள அமைப்பு
   (1) இலங்கைப் பொலிஸ் (2) இலங்கை இராணுவம்
   (3) இலங்கை கடற்படை (4) இலங்கை வான்படை
5. ''விஞ்ஞானபூர்வ முறைகளைப் பின்பற்றி பிரச்சினையொன்று தொடர்பான தீர்வினைத் தேடுகின்ற செயன்முறை'' என்பது
   (1) ஆராய்ச்சி (2) பரிசீலனை (3.) பகுப்பாய்வு (4) பரிசோதனை
6. பேண்தகு தொழில்நுட்பம் என்பதனால் கருதப்படுவது
   (1) தொழில்நுட்ப அறிவினை அனைத்து மக்களுக்கும் வழங்கி நாட்டின் வளர்ச்சியை ஏற்படுத்துவது
   (2) எதிர்கால சந்ததியினருக்கும் தொழில்நுட்ப அறிவினை வழங்கும் முகமாகச் செயற்படுவது
   (3) சமூக, கலாசார, பொருளாதார, சுற்றாடல் கோலத்திற்கு ஏற்ப தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது
   (4) மரபு ரீதியான தொழில்களில் தொழில்நுட்பங்களினை அறிமுகம் செய்வது.

Past Papers Wiki

7. பொருளாதாரமொன்றில் இடம்பெறும் அடிப்படைச் செயற்பாடுகளுள் **உள்ளடங்காதது**

(1) உற்பத்தி (2) விநியோகம் (3) நுகர்வு (4) மீள்பாவனை

8. கொந்தலா இம்புட்டு. மரமஞ்சள், புஸ்கொடி, பம்பரக்கொடி என்பன

(1) இலங்கைக்கே உரித்தான தாவரங்களாகும்
(2) இலங்கைக்கே உரித்தான மூலிகைகளாகும்
(3) ஈரவலயத்திற்கே உரித்தான தாவரங்களாகும்
(4) ஈரவலயத்திற்கே உரித்தான மூலிகைகளாகும்

9. இலங்கையருக்கு சர்வஜன வாக்குரிமையை அறிமுகம் செய்த அரசியல் யாப்புச் சீர்திருத்தம்

(1) குறு – மக்கலம் (2) டொனமூர் (3) சோல்பரி (4) மனிங்

10. இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பில் காணப்படும் நேரடி சனநாயக உத்தியாக அமைவது

(1) ஜனாதிபதித் தேர்தல் (2) பொதுத் தேர்தல்
(3) மாகாணசபைத் தேர்தல் (4) பொதுசனஅபிப்பிராயத் தேர்தல்

11. எளிய பெரும்பான்மைப் பிரதிநிதித்துவத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் நாட்டிற்கு மிகச் சிறந்த உதாரணமாக அமைவது

(1) இலங்கை (2) ஐக்கிய இராச்சியம் (3) ஐக்கிய அமெரிக்கா (4) வடகொரியா

12. “கம்சபா” என்னும் பிரதேச நிர்வாக முறையைச் செயற்படுத்திய அனுராதபுர ஆட்சியாளன்

(1) மகாசேனன் (2) தாதுசேனன் (3) தேவநம்பியதீசன் (4) பண்டுகாபயன்

13. எமது நாட்டில் உள்ளுராட்சி மன்றங்களின் எல்லைகளை நிர்ணயம் செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருப்பது

(1) தேர்தல் ஆணைக்குழுவிடம் (2) எல்லைநிர்ணய ஆணைக்குழுவிடம்
(3) நீதிச்சேவை ஆணைக்குழுவிடம் (4) பொதுச்சேவை ஆணைக்குழுவிடம்

14. உள்ளுராட்சி மன்றங்களின் முக்கியத்துவங்களுள் **அடங்காதது**

(1) பிரதேச அடிப்படையில் தலைவர்கள் உருவாகுதல்
(2) பிரதேச தேவைகளை இனங்கண்டு செயற்பட முடிதல்
(3) மக்களிடையே பிரதேச ரீதியான உணர்வை ஏற்படுத்துதல்
(4) மத்திய அரசின் அதிகாரப்பரவலாக்கல் மூலம் பிரதேச நிர்வாகம் அலகுவாக்கப்படுதல்

15. காஷ்மீர் தொடர்பாக நீண்டகாலமாக மோதலில் ஈடுபட்டுள்ள நாடுகள் முறையே

(1) இந்தியா - சீனா (2) இந்தியா – பங்களாதேஷ்
(3) இந்தியா - இலங்கை (4) இந்தியா – பாகிஸ்தான்

16. தீர்ப்பளிக்கும் செயற்பாட்டில் ஈடுபடும் சட்டபூர்வமான நிறுவனம்

(1) நீதிமன்றம் (2) இணக்கசபை
(3) சட்டமா அதிபர் திணைக்களம் (4) சிறைச்சாலைகள் திணைக்களம்

17 மோதல்களை சுமுகமாகத் தீர்க்காமையால் ஏற்படும் பாதகமான விளைவுளுள் ஒன்றாக அமையாதது

(1) மனஅழுத்தம் ஏற்படல்
(2) ஒருவரையொருவர் நம்பிக்கையுடன் நோக்குதல்
(3) நிலையான சமாதானம் குன்றுதல்
(4) சமூகத்தொடர்பு பாதிக்கப்படுதல்

Past Papers Wiki

18 நேரமுகாமைத்துவம் தொடர்பாகப் பின்பற்றக்கூடிய வழிமுறைகளுள் அடங்குவது

(1) தனக்குரிய கடமைகளை ஒழுங்கின்றி நிறைவேற்றுதல்

(2) காலவரையின்றி ஒரு வேலையைச் செய்தல்

(3) நாளாந்த கால அட்டவணையொன்றை தயாரித்துக் கொள்ளுதல்

(4) வேலைகள் ஒவ்வொன்றையும் காலதாமதத்துடன் மேற்கொள்ளுதல்

19 கடந்த காலங்களில் கமத்தொழில், மீன்பிடி நடவடிக்கைகள், தச்சுவேலை போன்ற தொழில்களுக்கான பயிற்சியை கற்றுக் கொடுத்தவர்கள்

(1) பாடசாலை ஆசிரியர்கள் (2) தொழிற் பயிற்சி நிபுணர்கள்

(3) குடும்ப அங்கத்தவர்கள் (4) வெளிநாட்டு தொழில்வல்லுனர்கள்

- A,B கூற்றுக்களை கவனத்தில் கொள்க.

கூற்று A – குடும்ப வாழ்க்கைச் செயற்பாடுகளிலும் தொழில் வாழ்க்கைச் செயற்பாடுகளுக்கே முன்னுரிமை வழங்க வேண்டும்.

கூற்று B – பிரதேசத்தின் அமைப்புக்கள், சங்கங்கள், பொதுவேலைகளில் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

20. மேற்கூறப்பட்ட கூற்றுக்களில் தனிநபர் ஒருவரின் அன்றாட வாழ்க்கையில் கவனம் செலுத்த வேண்டிய பிரதான விடயம் தொடர்பாக

(1) A பொய்யானது B உண்மையானது (2) A உண்மையானது B பொய்யானது

(3) A யும் B யும் பொய்யானது (4) A யும் B யும் உண்மையானது

(20x2=40 புள்ளிகள்)

## பகுதி II

**கவனிக்க**

- **முதலாம்** வினா கட்டாயமானது.
- **முதலாம்** வினா உட்பட மேலும் **நான்கு** வினாக்களைத் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

1. (i) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் ஆற்றப்படும் சேவைகள் **இரண்டு** தருக.

(ii) பூகோள ரீதியில் சகவாழ்வை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை ஏற்படுத்தும் காரணிகள் **இரண்டு** தருக.

(iii) நாடொன்றின் அபிவிருத்திக்காக உருவாக்கப்படும் தேசியக்கொள்கைகளுக்கு உதாரணங்கள் **இரண்டு** தருக.

(iv) எமது நாட்டில் செயற்படும் உள்ளூராட்சி மன்றங்களினால் ஆற்றப்படும் சேவைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(v) இணக்கசபையொன்றின் மூலம் தீர்த்துக்கொள்ளக்கூடிய பிரச்சினைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(vi) கடன் அட்டையை பாவிப்பதனால் உண்டாகும் அனுகூலங்கள் **இரண்டு** தருக.

**(2x6=12 புள்ளிகள்)**

2. (i) அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்துடன் இணைந்து செயற்படும் நிறுவனங்கள் **மூன்று** தருக. (03 புள்ளிகள்)

(ii) சமூகப் பாதுகாப்பிற்காக பாதுகாப்புப் படைகளினால் ஆற்றப்படுகின்ற பணிகள் **நான்கு** தருக. (04 புள்ளிகள்)

(iii) (A) தேசிய சட்டத்தின் பிரதான வகைகள் **மூன்றினையும்** தருக. (03 புள்ளிகள்)

(B) மேற்கூறிய சட்டங்களுள் **ஒன்றினை** விளக்குக. (02 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

3. (i) தொழில்நுட்ப மாற்றத்தினால் ஏற்படும் பாதகமான விளைவுகள் **மூன்று** தருக. (03 புள்ளிகள்)

(ii) நல்வாழ்வு, சகவாழ்வு என்பவற்றின் அடிப்படையில் சமூகத்தில் காணப்படும் **நான்கு** வகையான குழுக்களும் எவை? (04 புள்ளிகள்)

(iii) (A) இலங்கையில் செயற்படும் கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள் **மூன்று** தருக. (03 புள்ளிகள்)

(B) மேற்கூறிய வகைகளுள் **ஒன்றினால்** ஆற்றப்படும் பணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக? (02 புள்ளிகள்)

4. (i) இலங்கை வாக்காளர் ஒருவருக்கு சர்வஜன வாக்குரிமையை பயன்படுத்துவதற்காக நடைபெறும் தேர்தல்கள் **மூன்று** தருக. (03 புள்ளிகள்)

(ii) பிரதிநிதித்துவ சனநாயகத்தின் அடிப்படைப் பண்புகள் **நான்கு** தருக. (04 புள்ளிகள்)

(iii) (A) நாடுகளில் நிலவும் அரசியற் கட்சி முறைகளின் வகைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(B) மேற்கூறிய கட்சி முறைகளுள் **ஒன்றினை** விளக்குக. (02 புள்ளிகள்)

5. (i) இலங்கையில் செயற்படும் உள்ளூராட்சி மன்றங்கள் **மூன்றினையும்** தருக. (03 புள்ளிகள்)

(ii) உள்ளூராட்சி மன்றமொன்றின் பிரதானிகளின் அதிகாரங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் பொதுமக்களால் ஆற்றப்பட வேண்டிய கடமைகள் **ஐந்து** தருக. (05 புள்ளிகள்)

6. (i) மோதல் தீர்வுக்குத் தேவையான பண்புகள் **மூன்று** தருக. (03 புள்ளிகள்)

(ii) மோதல் ஒன்றினைச் சமாதானமாகத் தீர்த்துக்கொள்வதனால் ஏற்படும் நன்மைகள் **நான்கு** தருக. (04 புள்ளிகள்)

(iii) (A) மோதல் தீர்வுக்கு தேவையான சிறந்த வழிமுறைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக.(03 புள்ளிகள்)

(B) மேற்கூறப்பட்ட வழிமுறைகளில் **ஒன்றினை** சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

7 (i) திறந்த வெளிகளில் ஆற்றப்படுகின்ற தொழில்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) எமது நாட்டில் தொழிற்பயிற்சியினை வழங்கி வருகின்ற பிரதான நிறுவனங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) (A) நேர்முகத்தேர்வு நடைபெறும் மூன்று **வகைகளும்** எவை? (03 புள்ளிகள்)

(B) மேற்கூறிய வகைகளுள் **ஒன்றினை** விளக்குக. (02 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi



Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library